# மதுரையா சொர்கமா?

இருமுறை கடல் கோளால் அழிவுற்ற பாண்டியரின் தலைநகரங்களின் பெருமைகளை எல்லாம் ஒன்றுகூட்டி அமைக்கப் பட்டது இன்றைய மதுரை மாநகர் எனலாம்.பாண்டியர்கள் எல்லாவற்றிலும் வித்யாசப்பட்டனர்.தலைநகருக்கு நடுவில் இறைவனின் கோயிலை நியமித்த முதல் பெருமையும் அடக்கமும் பாண்டியரையே சாரும்.

வைகைக் கரையில் உலகின் மற்ற நாகரிகங்களைப் போல் மாபெரும் பாண்டிய சாம்ராஜ்யம் மீண்டும் வளர்ந்து புகழ் பரப்பியது.உலகின் பல நாடுகளுடன் மதுரை பல விதத்திலும் தொடர்பு கொண்டது.எனவே தான் ‘‘கூடல்’’ என்றானதோ?

**நக்கீரர் என்னும் மகா விமர்சகர்:**

நக்கீரர் என்னும் சங்கத்தலைவர் தூய பக்தியும்,மெய்யுணர்வுடன் கூடிய உலகறிவும் பெற்றவர்.பெண்களின் முடிக்கு இயற்கையாகவே மணம் உண்டா இல்லையா என்ற விவாதம் புலவர்களுக்குள் வந்தது.இறையனார் என்ற புலவர் ஒருபாடல் மூலம் அவருடைய பதிலைக் கூறினார்.அதனை வைத்து விவாதம் உருவாகியது.நக்கீரர் இறையனாரின் கருத்தை மறுத்தார்.இறையனார் தான் சிவாம்சம் பெற்றவர் என்று உணர்த்தியும் பயமில்லாமல் நக்கீரர் விவாதித்து கடைசியில் சாம்பலானார்,பின் உயிர்பெற்று மீண்டார்.இது புராணம்.இதன் உட்பொருளை அறிய வேண்டும்.

மக்களைக் குழம்பச்செய்யும் கருத்துகளுக்கு இலக்கியத்தில் ஒருபோதும் இடம் தரக்கூடாது என்பதையே இந்த நிகழ்ச்சி சுட்டுகிறது.கடவுளே ஆனாலும் மக்களை நல்வழியிலேயே நெறிப்படுத்திட வேண்டும் என்று காட்டப்படுகிறது.இப்படி புலவர்கள் பணிபுரிந்த காரணத்தாலே தான் பண்பாடு உயர்ந்தது,இன்றும் நிலைத்து உள்ளது.

**சங்கப்பலகை என்ற தராசு:**

தமிழ்ச்சங்கத்தில் எப்போதுமே புலவர்களுக்குள் ஒற்றுமை இருந்தது என்று கூறமுடியாது.ஆம்,உலகப் பொதுமறையாம் வள்ளுவரின் திருக்குறள் முதலில் மறுக்கப்பட்டது அல்லவா?எல்லாத் துறையிலும் ‘‘பாலிடிக்ஸ்’’ என்றும் இருந்துள்ளது.திருவிளையாடல் புராணம்,மதுரை ஈசர் தமிழ்ச்சங்கத்தில் நடுவுநிலைமை மாறாது இலக்கியங்கள் வெளிவர ‘‘சங்கப்பலகை’’ என்ற ஒரு பலகையை வழங்கினார் என்று கூறுகிறது.

மீனாட்சிகோயிலில் பொற்றாமரைக் குளத்தில் வடக்கு மூலையில் ஒரு சதுரமான தொட்டி ஒன்று உள்ளது.அவ்விடமே சங்கப்பலகை மிதக்கப்பட்ட இடம் என்று நம்பப்படுகிறது.

புலவர்கள் கூடி இறைவனை வழிபட்டபின்,ஊரார் முன் குளத்தில் சங்கப்பலகையின் மீது புதிதாக எழுதப்பட்ட இலக்கியம் வைக்கப்படும்.பலகையைப் பூஜித்து குளத்தில் மிதக்க விடுவர்.இலக்கியம் தரமானதாக இருந்தால் பலகை மிதக்கும்,இல்லையேல் இலக்கிய ஓலைச்சுவடியைத் தண்ணீரில் தள்ளிவிடும்.

இன்று உணவுப்பொருளின் தரத்தினை அறியப் பலவித கருவிகள் உள்ளன.அதுபோல் அன்றும் இலக்கியத்தின் தரத்தினை அறிய சங்கப்பலகை என்ற கருவி இருந்துள்ளது.இதை ஏற்பதும் ஏற்காததும் உங்கள் சுதந்திரம்.

**உலகில் எங்கும் இல்லாத புதுமை:**

உலகில் பல மொழிகளில் பல மகாகவிகள் உள்ளனர்.அவர்களை விதவிதமாக மக்கள் மரியாதை செய்து வருகின்றனர்.நம்காலத்தில்

வள்ளுவருக்குக் கன்யாகுமரியில் மாபெரும் சிலைநிறுவப்பட்டது.இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியரின் வீடு பத்திரமாக பாதுகாக்கப்படுகிறது.

நம் நாட்டுப் புலவர்கள் பலர் அடக்கம் காரணமாக பெயரைக்கூட எழுதவில்லை.சங்க இலக்கியத்தில் பல பாடல்களுக்குப் புலவர் யார் என்றே தெரியவில்லை.மக்கள் புலவர்கள் கூறியதை மனதார ஏற்று வாழ்க்கையில் கடைபிடிப்பதையே பெரிதாக எண்ணினர்.அதுவல்லவா ஒரு புலவரின் வெற்றி?!

பாண்டியர்கள் வித்யாசமாக,சங்கப்புலவர்களுக்கு மீனாட்சி கோயிலில்,சுந்தரேஸ்வரர் சன்னிதி வெளிப்ரகாரத்தில் வடக்குமூலையில் பராசக்தி சன்னிதிக்கு அருகில் சங்கப்புலவர்கள் சன்னிதி உள்ளது.அதில் ஈசருடன் முக்கியபுலவர்கள் சிலைவடிவில் உள்ளனர்.இறையனார் என்ற புலவர் எழுதிய சங்கப்பாடலும் கல்வெட்டாக அமைக்கப்பட்டு உள்ளது.நித்திய பூஜைகளும் நடைபெறுகின்றன.

சிந்தாமணிக்ரஹம்:சிந்தாமணி என்பது ‘‘வேண்டியதை எல்லாம் வழங்கும் கல்,அதாவது மணி’’ என்பன புராணங்கள்.மீனாட்சியின் கர்ப்பக்ரஹம் சிந்தாமணி க்ரஹம் எனப்படுகிறது.

அன்னையிடம் பரிபூர்ணமாக நாம் சரண் புகும் போது,அன்னை நாம் வேண்டிய எல்லாவற்றையும் வாரி வழங்குகிறாள் சிந்தாமணியாக.மேலும் ஒருஅரசனும் அரசியும் தன் மக்களுக்கு வேண்டியது அனைத்தையும் முறையே வழங்கிச் சிந்தாமணியாக விளங்கினர் எனலாம்.

**கதம்ப வன வாசினி:**

அன்னை மீனாட்சி கதம்பக்காட்டில் கோயில் கொண்டதால் ‘‘கதம்ப வன வாசினி’’ என்று அழைக்கப்படுகிறாள்.மதுரையின் ஸ்தல விருட்சம் கடம்ப மரம்.ஆனால் கதம்பம் என்னும் சொல்,பல வகைமரங்கள் என்ற பொருள் தரும்.பல வகையான பக்திமுறைகள் செய்யும் அன்பர்கள் சூழ் உலகம் என்னும் காட்டில் வாழ்பவள் என்று பொருள் கொள்ளலாம்.

**ராமன் வந்த மதங்காஸ்ரமம்:**

ராமாயணக் காலத்தில் கபாடபுரம் தான் இருந்தது.மதுரை இல்லை.ஆனால் இவ்விடத்தில் மதங்கமாமுனிவர் என்ற மஹான் ஆஸ்ரமம் அமைத்து தேவியை வழிபட்டு வந்தார்.அவரைத்தேடி சீதையை இழந்த ராமனும் லக்ஷ்மணனும் வந்தனர் என்று வால்மீகி கூறுகிறார்.அந்த மதங்காஸ்ரமம் இன்றைய மதுரை என்றே தோன்றுகிறது.மதங்கமுனி வழிபட்ட தேவி ‘‘மாதங்கி’’ எனப்படுகிறாள்.மதுரைமீனாட்சிக்கே ‘‘மாதங்கி’’ என்ற பெயர் வெகுசிறப்புடன் விளங்குகிறது.

**கோயில் நகைகள்:**

மீனாட்சிசொக்கரின் பல நகைகள் அழகானவை.அதைவிட வித்யாசமானவை.அன்று மன்னர்கள் பக்தியால் வாரி வாரி தங்கமும்,நவமணிகளும் கோயில் தெய்வங்களுக்கு அர்ப்பணித்தனர்.

மதுரைக்கோயிலின் பல நகைகள் பாண்டியரின் காலச் சிறப்பு உடையவை.குறிப்பாக க்ரீடங்கள்,செங்கோல் போன்றவை ஒருவேளை பாண்டியர்களின் பாரம்பரிய நகைகளோ எனத் தோன்றுகிறது.இன்னும் சொன்னால் மீனாட்சியும் ஈசரும் வாழ்ந்த காலத்தில் அவர்கள் அணிந்திருந்தவையோ எனத் தோன்றுகிறது.

**யார் இந்த மீனாட்சி?**

மெகஸ்தனிஸ் என்ற அறிஞர் கி.மு.நான்காம் நூற்றாண்டுகளில் மதுரைக்கு வருகிறார்.அப்போது மதுரையைப் ’பண்டேயா’ என்ற அரசி ஆண்டதாக அவர் எழுதுகிறார்.அவள் மிகவும் நேர்மையுடன் அன்புடன் தன் மக்களைத் தாய் போல் அரவணைத்து ஆண்டாள் என்று எழுதுகிறார்.அவள் பல ஆயிரம் யானை,குதிரை,தேர்

மற்றும் காலாள் படைகள் வைத்து இருந்தாள்.அவள் பாண்டிய நாட்டை முன்நூற்று அறுபத்து ஐந்து மாகாணங்களாகப் பிரித்து ஆண்டாள் என்கிறார்.இவளை மக்கள் தாயாய்,தெய்வமாய் வணங்கி மதித்தனர்.

மக்களைக் காக்கும் அரசனை தெய்வமாக வழிபடுதல் பல நாடுகளிலும் உள்ள பண்பாடு தானே?ஆனால் பாண்டியரின் அரச பக்தி குருட்டுபக்தியில்லை.

இந்த ராணிதான் மீனாட்சியோ ???அவள் கணவன் வடைஇந்தியாவில் இருந்து வந்த மாபெரும் அரசன்,சித்தன்,ஆத்மஞானி என்று எண்ணிடத் தோன்றுகிறது.இருவரும் பாண்டியநாட்டைக் கண்ணும்கருத்துமாய் தாய் போல் காத்தனர்.இறுதியில் கயிலைவாழ் ஈசனாகவும் பார்வதியாகவும் மதிக்கப் பெற்றதோடு வழிபாட்டுக்கும் உரித்தாயினர்.இவர்கள் தான் மீனாட்சிசுந்தரேஸ்வரரோ????

மூன்றாம் தமிழ்ச்சங்கமும் நிறுவப்பட்டது.மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரனார் தலைமை தாங்கித் தமிழ் வளர்த்தார்.தென்னாட்டின் பல இடங்களில் வாழ்ந்த புலவர்கள் ஒன்றுகூடி சங்கத்தில் சமூகநலன் கருதி இலக்கியங்களைப் படைத்தனர்.ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் புலவர்களாய்ச் சங்கத்தில் பணியாற்றினர்.பெண் கல்வி என்பது நமக்கு ஒன்றும் புதியதில்லை.

**பாண்டியர் காத்த பண்பாடு:**

தமிழ்ச்சங்கம் புலவர்களைக் கொண்டு ஏற்றிய பாடல்களைப் பாண்டிய மன்னர்கள் முறையாகத் தொகுத்தனர்.அவை ‘‘சங்க இலக்கியங்கள்’’ என்று இன்று உலகப்புகழ் பெற்று தமிழின் பெருமையை உணர்த்தி வருகின்றன.

**அக்கால எடிட்டோரியல் அல்லது சென்சார் துறை-------?**

வேறெதுவும் இல்லை,தமிழ்ச்சங்கம் தான்.புலவர்கள் எதை வேண்டுமானாலும் பாடவில்லை,பாடப்பட்ட பாடல்களின் தரம் பார்த்தே மக்களிடம் பரப்பினர்.தொல்காப்பியத்தினை முறையாகப் பின்பற்றினர்.அதனால் தான் சில பாடல்கள் முழுமையாக இல்லை என்றாலும் ,கிடைத்த வரிகள் உயர்ந்த பொருளைச் சொன்னதால் அவை தொகுக்கப்பட்டன.இதனால் தான் ‘‘தமிழ் வளர்த்த மாமதுரை’’ என்று போற்றப்படுகிறது இவ்வூர்.இங்கே தமிழ் வளர்த்தல் என்பது,தமிழ்மக்களின் வாழ்வினை பண்படுத்துதல் என்பதே ஆகும்.மூன்றாம் தமிழ்ச்சங்க இலக்கியங்கள் யாவும் முறையாக இன்று புத்தகவடிவில் எளிய விளக்கத்துடன் கிடைக்கின்றன.

**மாங்குடி மருதனார் பார்த்த மதுரை:**

இன்று டீ.வி சேனல்களில் பல நாடுகளின் பல ஊர்களையும் காட்டுகிறார்கள்.அதுபோல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சங்கப் புலவர் மாங்குடி மருதனார் என்பவரைப் பாண்டிய மன்னன் ஒருவன் தன் மதுரையின் அழகினை வார்த்தைகளால் படம்பிடிக்கக் கூறி உள்ளான்.அவரும் அழகாக காலை முதல் அர்த்தஜாமம் வரை மதுரையின் அன்றாட நிகழ்வுகளையும்,ஊரின் அழகையும் பாடி உள்ளார்.அதுவே ‘‘மதுரைக் காஞ்சி’’ என்னும் தமிழிலக்கியம் ஆகும்.

‘‘மகாவிஷ்ணுவின் நாபியில் தோன்றிய தாமரைப்பூப் போல மதுரை மாநகரம் அமைந்துள்ளது.ஊரின் நடுவில் தாமரையின் பொகுட்டு போல் சிவன் கோயில் உள்ளது.அதுவே மீனாட்சி ஆலயம்.தாமரைக் குளம் வைகையாறு ஆகும்.சதா தேனீக்கள் போல் பல நாட்டு மக்கள் ஊரில் உள்ளனர்

என்று வர்ணித்துள்ளார்.தேவி வழிபாட்டின் முக்கிய எந்திரம் ஸ்ரீசக்கரம் ஆகும்.அது ஆயிரம் இதழ்கள் உடைய தாமரை போன்றது.அவ்வெந்திரத்தினைப் போல் மதுரை உள்ளது.

**பரிபாடல்......மதுரையின் அக்கால டாக்குமென்டரி ஷோ:**

பரிபாடல் என்ற மற்றொரு சங்க இலக்கியம் பல புலவர்களால் பாடப்பட்டது.மதுரையில் வாழ்ந்த புலவர்கள் வேறுநாட்டு மக்களுக்கு மதுரையின் பெருமைகளைக் கூறவே இந்நூல் பாடப்பட்டது எனலாம்.

மதுரை,திருப்பரங்குன்றம்,அழகர்கோயில்,வைகை ஆற்றில் மக்களின் அக்கால விளையாட்டுகள் எனப் பல பாடல்கள் உள்ளன.